**செய்தி வெளியீடு எண்: 826** **நாள்: 12.11.2018**

**பாலாறு பிரச்சனை குறித்து திரு. துரைமுருகன் அவர்கள் 12.11.2018 அன்று முரசொலியில் வெளியிட்ட அறிக்கைக்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்களின் பதிலறிக்கை**

-----

மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள், திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னையில் சந்தித்தபோது, பாலாற்றில் ஆந்திர அரசு தடுப்பணைகள் கட்டியது குறித்து ஏன் பேசவில்லை ? என்று மாண்புமிகு முதலமைச்சர் கேள்வி எழுப்பியதற்கு, நேரடியாக பதில் அளிக்காமல், பாலாறு பிரச்சனையில் திராவிட முன்னேற்றக் கழகம் முழு முனைப்புடன் செயல்பட்டது என்ற கருத்தை மக்களை குழப்புவதற்காக ஓர் அறிக்கையை திரு. துரைமுருகன் அவர்கள் 12.11.2018 அன்று வெளியிட்டுள்ளார்.

திரு. துரைமுருகன் அவர்கள், 25.7.2016 அன்று ஆந்திர அரசு பாலாற்றில் தடுப்பணை கட்டுவது குறித்து சட்டமன்றத்தில் பேசும்போது, ‘‘ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் நம்மிடத்திலே நல்ல நட்பாக இருக்கக்கூடியவர். இன்னும் சொல்லப்போனால் அவருடைய தொகுதி, தமிழ்நாட்டை ஒட்டியிருக்கக் கூடிய தொகுதி. எனவே, இப்பிரச்சனையை சுமூகமாக தீர்க்க வேண்டுமானால், சர்வ கட்சி தலைவர்கள் நான்கு பேரை கூட்டிக் கொண்டு போய் அவர்களிடத்தில் விளக்கம் சொன்னால் அவராகவே ஒத்துக் கொள்வார்’’ என்று தெரிவித்தார். இப்படி கூறிய திரு. துரைமுருகன் அவர்கள் 9.11.2018 அன்று, மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் சென்னையில் திரு. மு.க.ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோரை சந்தித்தபோது இப்பிரச்சனைக்கு தீர்வு கண்டிருக்கலாமே? ஏன் செய்யவில்லை? இவ்வாறு கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பினை தவறவிட்டு விட்டு, உண்மையை மறைத்து பூசி மெழுகி வரலாற்று நிகழ்வுகள் குறித்து மக்களை திசை திருப்பும் வகையில் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி 12 டி.எம்.சி. அடி நீர் சென்னை குடிநீர் தேவைக்காக ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு இதுவரை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் 1.60 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே பெறப்பட்டுள்ளது. திரு. சந்திரபாபு நாயுடு அவர்களை நேரில் சந்தித்தபோது இந்த வாய்ப்பை பயன்படுத்தி கிருஷ்ணா

நதியிலிருந்து வரவேண்டிய நீரை கேட்டிருக்கலாமே? அரசியல் பேசுவதில் இருந்த ஆர்வத்தில், தமிழ்நாட்டு மக்களின் நன்மையை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் ஏன் மறந்தார்கள் ? என என்னோடு சேர்ந்து தமிழ்நாட்டு மக்களும் எண்ணுகிறார்கள். அவர்களின் எண்ணமெல்லாம் ஆட்சி அதிகாரம் குறித்தே. தமிழ்நாட்டு மக்கள் நலன் குறித்து துளியும் அவர்களுக்கு கவலையுமில்லை, அக்கறையுமில்லை.

1892–ஆம் ஆண்டைய சென்னை–மைசூர் ஒப்பந்தத்தின் அட்டவணை–A-வில் குறிப்பிட்டுள்ளபடி, பன்மாநிலங்களுக்கிடையே பாயும் 15 முக்கிய நதிகளில் பாலாறும் ஒன்றாகும். இந்த ஒப்பந்தப்படி, மேற்பகுதியில் உள்ள மாநிலங்கள், கீழ்பகுதியில் உள்ள மாநிலங்களின் முன் அனுமதி இல்லாமல், தடுப்பணை கட்டுதல், நீரை தடுத்தல் / நீரை திருப்புதல் போன்ற செயலை மேற்கொள்ளமுடியாது.

சித்தூர் மாவட்டத்தில், குப்பம் எனும் பகுதிக்கு அருகே, பாலாற்றின் குறுக்கே ஓர் அணையினை ஆந்திர அரசு கட்ட இருப்பதாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில், செய்தித் தாள்களில் 4.1.2006 அன்று தகவல்கள் வெளிவந்தபோது, 5.1.2006 அன்றே, மாண்புமிகு அம்மா அவர்கள் 1892ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி, கடும் கண்டனம் தெரிவித்தது மட்டுமல்லாமல், பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, அதில் ஒரு கட்டமாக மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். இதன் காரணமாக, 7.1.2008 அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் இப்பிரச்சனைக்கு மத்திய அரசு தீர்வு காண வேண்டும் என ஆணையிட்டது. **இதனைத் தொடர்ந்து, மத்திய நீர்வளக் குழுமத் தலைவர், இப்பிரச்சனையில் தீர்வு காணப்படும் வரையில், ஆந்திர அரசு அணை கட்டும் திட்டத்தை மேற்கொள்ளக் கூடாது என கேட்டுக்கொண்டார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உரிய தருணத்தில் சட்டபூர்வமாக எடுத்த நடவடிக்கையினால் மட்டுமே தமிழ்நாட்டிற்கு சாதகமான இத்தகைய முடிவு கிடைக்கப் பெற்றது.**

2006–ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் திமுக அரசு அமைந்த பின், ஆந்திர அரசு தடுப்பணை கட்டும் பிரச்சனையை அவ்வப்போது எழுப்பி வந்தது. அப்போது எதிர்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்த திமுக அரசுக்கு அவற்றை சுட்டிக்காட்டி, அணை கட்டுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால், திமுக ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் எந்தவொரு அழுத்தமும் கொடுக்கப்படவில்லை. திரு. துரைமுருகன் தனது அறிக்கையில், **5.8.2008** அன்று, அன்றைய ஆந்திர முதலமைச்சர் மறைந்த திரு. ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டியை சந்தித்து, பாலாற்றில் சட்டத்திற்கு புறம்பாக தடுப்பணைகள் கட்டப்படாது என்ற உறுதிமொழியை பெற்று வந்தார்கள் என்கிறார். அந்த உறுதிமொழியின் அடிப்படையிலேயே, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை ஏன் திமுக ஆட்சி முடிவுக்கு கொண்டுவரவில்லை? இதிலிருந்தே, அந்த உறுதிமொழி எந்தவிதமான சட்ட அங்கீகாரமும் இல்லாத ஒரு வெத்துவேட்டான உறுதிமொழி என்பது தெளிவாகிறது. எனவே, திரு. துரைமுருகனின் அறிக்கை வினோதமானதா? அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேட்டி வினோதமானதா? என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

மாறாக, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், சாட்சியாளரின் பிரமாணப் பத்திரம் **14.12.2011** அன்று, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. **அதாவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011ல், மீண்டும் ஆட்சி பொறுப்பேற்ற பின்தான் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**

“ஆந்திர மாநில அரசுக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைமையிலான மத்திய அரசு மூலம் அறிவுறுத்த வைத்ததும் தலைவர் கலைஞர்தான்’’, என திரு. துரைமுருகன் அவர்கள் கூறியுள்ளார். **ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கினால்தான், மத்திய அரசு இவ்வாறு அறிவுறுத்தியது என்பதை திரு. துரைமுருகன் மறந்து விட்டார்.**

மேலும், பாலாற்றின் குறுக்கே திமுக ஆட்சிக் காலத்தில் பல தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது என்பது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்து, தற்போது வெத்து வேட்டு அறிக்கை விடும் திரு. துரைமுருகனுக்கு தெரியாமல் போனது விந்தையாக உள்ளது.

பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை ஆந்திர அரசு தன்னிச்சையாக உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 1.7.2016 அன்று, உடனடியாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், ஆந்திர அரசின் இத்தகைய செயல் 1892–ம் ஆண்டைய ஒப்பந்தத்தை மீறும் செயல் ஆகும் எனவும், உயர்த்தப்பட்ட தடுப்பணையின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரவும், கூடுதலாக நீரைத் தேக்காமல் இருக்கவும் மற்றும் இயற்கையாக தமிழ்நாட்டிற்குள் வரக்கூடிய நீரை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க கேட்டுக் கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, மத்திய அரசுக்கும், ஆந்திர அரசுக்கும் 10.9.2018 அன்று மாண்புமிகு அம்மாவின் அரசால் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் 18.7.2016 அன்று வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கு நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், பாலாறு நதிநீர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு மத்திய அரசு 7.5.2018 அன்று பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பேச்சுவார்த்தையின் முடிவில், பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகளை சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவு பெறாமல் கட்டக் கூடாது என்றும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசால் 18.7.2016 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முடிவு வரும் வரை ஆந்திர அரசு தடுப்பணைகளின் உயரத்தை அதிகரிக்கக்கூடாது என்றும், மத்திய நீர்வள ஆதாரம், நதிநீர் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சக செயலாளர் அறிவுறுத்தினார். மேலும், தற்போதைய சூழ்நிலையில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு காத்திருந்து, அத்தீர்ப்பின்படி நடவடிக்கை மேற்கொள்வது உகந்ததாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 2006 முதல் 2011 வரையிலும், மத்தியில் 2013 வரையிலும் ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகம், பாலாறு நதிநீர்ப் பிரச்சனையில் முழு முனைப்போடு செயல்பட்டிருந்தால் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. மேலும், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுத்தீர்கள்? அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், இப்பிரச்சனை தொடர்வதற்கு

வாய்ப்பு இருந்திருக்காது. வழக்கமான உங்கள் கபட நாடகம் தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது.

உங்களை ஆந்திர முதலமைச்சர், 9.11.2018 அன்று சந்தித்த அன்றே, பாலாற்றின் குறுக்கே 41.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 21 தடுப்பணைகளை சீரமைக்கவும், உயர்த்தவும் ஆந்திர அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இது சம்மந்தமாக, தமிழக விவசாயிகள் கடும் அதிர்ச்சி என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியானபோதுகூட, இதுபற்றி ஆந்திர முதலமைச்சர் உங்களை நேரில் சந்தித்தபோது நீங்கள் ஏன் அவரிடம் பேசவில்லை ?

கோதாவரி நீரை தமிழ்நாட்டிற்குக் கொடுப்போம் என்று மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் கூறியதாக செய்தி வந்துள்ளது. உண்மையில், மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 23.11.2017 அன்று சென்னைக்கு வந்திருந்தபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் கேட்டுக் கொண்டதன் பேரில், சத்தீஸ்கர் மாநிலத்தின் பங்கிலிருந்து சுமார் 125 டி.எம்.சி. அடி நீரை கோதாவரி நதியில் அக்கினப்பள்ளியில் இருந்து இணைப்புக் கால்வாய் மூலம் காவேரியில் கல்லணை வரை நீர் அளிக்க திட்டம் தயாரிக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்கள். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறார்கள். ஏதோ திமுக கேட்டுக் கொண்டதற்கிணங்க, இத்திட்டத்தை ஆந்திர அரசு செயல்படுத்த முன்வருவது போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

தமிழ்நாடு அரசும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் பாலாறு பிரச்சனை சம்பந்தமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும், ஆந்திரப் பிரதேச அரசுக்கும் பல்வேறு காலகட்டங்களில் கோரிக்கை மனுக்களையும், கடிதங்களையும் அனுப்பியுள்ளனர்.

தமிழ்நாட்டு மக்கள் நலனில் சிறிது கூட அக்கறை இல்லாமல் பதவி சுகம் மற்றும் குடும்ப நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படும் திமுக இயக்கத்திற்கும், அப்போது அமைச்சராக இருந்த திரு. துரைமுருகன் அவர்களுக்கும் பாலாறு பிரச்சனை குறித்து பேச எந்தவித தகுதியும் இல்லை.

பாலாறு நதிநீர் பிரச்சனையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, மிக உன்னிப்புடனும் கவனத்துடனும், சட்டரீதியாகவும் பிரச்சனையை தொடர்ந்து அணுகி வந்ததால், ஆந்திர அரசு புதிய அணை கட்டும் பணிகளை நிறுத்தி வைத்துள்ளது. பாலாறு நதிநீர் பிரச்சனையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கு, மாண்புமிகு அம்மாவின் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**D. ஜெயக்குமார்**
**மீன்வளம், பணியாளர் மற்றும்**
**நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**